DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதன்கிழமை 16ம் நாள் சாட்சியாகிய சந்துரு என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்துரு | வயது | 49 |
| த/பெ. | கணேசன் | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | ஆட்டோ ஓட்டுநர் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.43/2019**

(1 முதல் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பாக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**<u>முதல் விசாரணை 16.04.2025 அ.சா.5</u>**

1. நான் தற்போது அரக்கோணத்தில் வசித்து வருகிறேன். 2017ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை. பெருமுச்சி பெட்ரோல் பங்க் அருகே சண்டை சம்மந்தமாக போலீசார் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (எதிரி கிஷோர் குமாரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா. 5ன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் விசாரித்தனர்.

**(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை அரசு தரப்பில்–</u>**

2. 11.07.2017ம் தேதி பிற்பகல் 1 மணிக்கு அரக்கோணம் நகர காவல் நிலைய குற்ற எண்.392/2017 வழக்கில் காவல் ஆய்வாளர் எதிரி கிஷோர் குமாரை கைது செய்து அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், சசிகுமார் முன்னிலையிலும் பதிவு செய்தார் என்றால் இல்லை.

3. போலீஸ் விசாரணையில் சாட்சியாக ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி

கையொப்பம் செய்ததாக தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எனக்கு வழக்கு பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன விவரம் உள்ளது என்று தெரியுமா என்றால் படித்துபார்க்கவில்லை. போலீசார் கேட்டதால் கையொப்பம் போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.